## கூரத்தாழ்வான்
## வாழி திருநாமம்

சீராரும் திருப்பதிகள் சிறக்க வந்தோன் வாழியே
தென்னரங்கர் சீர் அருளைச் சேருமவன் வாழியே
பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே
நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே
நாலூரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே
ஏராரும் தையில் அத்தத்திங்கு வந்தான் வாழியே
எழில் கூரத்தாழ்வான் தன் இணையடிகள் வாழியே

பொருள் விரிக்கும் எதிராசர் பொன்னடியோன் வாழியே
பொன் வட்டில் தனை எறிந்த புகழுடையோன் வாழியே
மருள் விரிக்கும் முக்குறும்பை மாற்ற வந்தோன் வாழியே
மயர்வறவே மெய்ஞ்ஞானம் விளங்கிடுவோன் வாழியே
இருள் விரிக்கும் சிவம் எதிரிட்டு எழுத்திட்டோன் வாழியே
ஏதமற எவ்வுயிர்க்கும் இதம் அளித்தோன் வாழியே
அருள் விரிக்கும் அரங்கத்தான் அடி இணையோன் வாழியே
அழகாரும் கூரத்தாழ்வான் அடி இணைகள் வாழியே

---